மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது விவசாயிகளுக்கு மின் இணைப்பு இரவில்தான் கொடுக்கப்படுகிறது. பகலிலே கொடுப்பதில்லை. அதனால் இரவு வயலுக்குப் போகும்போது பாம்பு கடித்து இறந்துவிடுகிறார்கள். இரவில் வெட்டு, குத்தெல்லாம் நடக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் மின் நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 969 திரு. க. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் அஞ்சு கிராமத்தில் 33 KV மின் நிலையம் (Transfo mer) அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) 110/11 கே. வி. மின் நிலையம் ஒன்று ரூபாய் 47 இலட்சம் செலவில் அஞ்சு கிராமத்தில் அமைப்பதற்காக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 970—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஜோலார்பேட்டைக்கு அருகே சிட்கோ மூலம் ஒரு புதிய தொழிற்பேட்டை ஆரம்பிக்க செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் ?

1981 மே 5]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோரிட மிருந்து குறைந்தது பத்து விண்ணப்பங்களாவது வருமாயின் தொழிற்பேட்டை அமைப்பதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் எடுக்கப் படும்.

[முற்பகல் 9-10]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் அதற்காக விண்ணப்பித்தால் அரசு ஆலோசிக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருப்பதாலும், அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலேயும் அரசே முன்வந்து தொழிற்பேட்டையை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுதான் அங்கே தொழிற்பேட்டை கட்ட முடிவெடுத்திருக்கிறது. சிட்கோ மூலம் கட்டப்படும். தொழில் முனைவர்கள் முன்வந்தால் அரசு கட்டிக் கொடுக்கும்.

பத்திரப் பதிவுத் துறையின் துணைப்பதிவாளர் பதவிகளுக்கான நேரடித்தேர்வு முறை.

*வினா எண் 971: திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தமிழக அரசு பத்திரப் பதிவுத் துறையின் சப்-ரிஜிஸ்த ரார் பதவிகளுக்கு நேரடித் தேர்வு செய்யும் முறையைக் கைவிடுவ தற்கு அரசிற்கு வேண்டுகோள் வந்ததுண்டா ?

(ஆ) ஆம் என்றால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சப்-ரிஜிஸ்டிரார் பதவிக்கு அசிஸ்டெண்டுகளுக்கு பிரமோஷனுக்கு இப்போது ஸ்டாக்னேஷன் பிரியட் 23 வருடத்திலே இருந்து 25 வருடங்கள் வரை இருப்பதன் காரணமாக அவர்